1971 ஜுன் 25]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் காலாண்டுப் பட்டியல் கடைசியாக 1969-இல் வெளியிடப்பட்டது.

(இ) 1—4—1970 வரைக்கும் திருத்தப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் காலாண்டுப் பட்டியலும், 1—1—1968 வரைக்கும் திருத்தப்பட்ட ஆண்டு நாட்டியல் பட்டியலும் (Civil list) தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கெஜடெட் பதவி களுக்கு உயர்வு அளிக்கும்போது சீனியாரிடிபடியே கொடுக்கப் படுகிறதா ? தகுதி திறமை என்று வைத்துக் கொண்டு அளிக்கப் படுகிறதா? தகுதி திறமை என்றால் அதிலே பல ஊழல்கள் நடை பெறக் காரணமாக இருப்பதால், சீனியாரிடியையே கணக்கில் வைத்துக் கொண்டு உயர்வு கொடுக்கப் படும் என்று முடிவு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சிவில் லிஸ்ட் எப்பொழுது வெளியிடப்பட்டது என்பது பிரதானக் கேள்வி. லிஸ்ட் அச்சு செய்வதில் இது போன்ற விஷயங்கள் பார்க்கப் படுவதில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அச்சடிக்கப்பட்ட சிவில் லிஸ்ட் அங்கத்தினர்களுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைச் செய்யலாமா என்று யோசிக்க வேண்டும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சம்பளத்தில் மட்டும் வேறுபாடு வைத்துக் கொண்டு, எல்லா வேலைகளும் அரசிதழ் பதிவு பெற்ற வேலைகளாகக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுவும் யோசிக்க வேண்டிய விஷயங்களில் ஒன்று.

திரு. எம். சுரேந்திரன் : சார், கெஜடெட் பதவியாளர்கள், அல்லாதவர்கள் என்று இரு பிரிவினைகள் ஏற்படுத்தப்பட்டது வெகு காலத்திற்கு முன்னால். இப்பொழுது இருக்கும் நிலையில் அவரவர்கள் கடமைகளை உணர்ந்து காரியம் செய்து விடுவது நல்ல தல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் க்ளாஸிபிகேஷன், முறையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். யோசிக் கலாம் என்று ஏற்கனவே சொன்னேன்.

Police Mobile Laboratory in City

* 47 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Police Mobile Laboratory has been set up in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) வலம் வரும் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடமொன்று 1970-ம் வருடம் மே மாதம் 1-ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) இந்த வலம் வரும் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம், ஆய்வுக்கூடத்தில் சோதனைகள் செய்வதற்குப் பதிலாக, குற்றம் நிகழ்ந்த இடத்திலேயே தொடக்க நிலைச் சோதனைகளைச் செய்து குற்றங்களைத் துப்பு துலக்குவதில் காவல்துறை அதிகாரிகளுக்குத் துணை புரிவதற்காகவுள்ளது. வலம் வரும் சட்டம் சார்ந்த இந்த அறிவியல் ஆய்வுக் கூடத்தில், நிழற்படங்களை எடுக்கவும், அவற்றைக் கழுவிப் பார்க்கவும், விரல் ரேகைகள், அடிச்சுவடுகள், கருவிகளைக் கையாண்ட அடையாளங்கள் முதலியவற்றைப் படமெடுக்கவும் அவற்றைப் பாதுகாக்கவும் உரிய கருவிகள் உள்ளன.

திரு. என். டென்னிஸ் : சார், மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களுக்கு இந்த வசதி விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லா மாவட்டங்களிலும் இந்த வசதியை விரிவு படுத்துவது என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : எல்லா மாவட்டங்களிலும் இந்த வசதியை விஸ்தரிப்பதைப் பற்றி நினைவுப்படுத்திக் கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்கள், குற்றங்கள் அதிகமாக இருக்கும் மாவட்டங்களில் இம்முறையை உடனடியாக விஸ்தரிக்க எற்பாடு செய்வாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லா மாவட்டங்களிலும் இந்த வசதியை விரிவுபடுத்துவது என்ற கட்டத்தில், அம்மையார் அவர்கள் கூறியது போல, குற்றங்கள் அதிகமாக இருக்கக் கூடிய மாவட்டங்கள் என்ற நிலை வரும்போது, இந்த வசதி விரிவுபடுத்துவது முன்னிலைப்படுத்தப்படும்.

திரு. நா. வீராசாமி : இவ்வண்டி காவல் துறையில் வாங்கப்பட்டு ஓர் ஆண்டுகாலம் ஆகிறது. இதுவரையிலே எத்தனை குற்றங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குற்றக் களங்களில் கிடைத்த தடையப் பொருள்களை அறியத்தான் இவ்வண்டிகள் பயன்படுகின்றன. இதுவரையில் 68 இடங்களில் இந்த வண்டி பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சென்னை நகரிலே 47 இடங்களிலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 21 இடங்களிலும் இந்த வண்டிகள் சென்றிருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இதிலே துப்பறியும் நாய்களைக் கொண்டு போகிறார்களா?

1971 ஜூன் 25]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேவைப்பட்டால் கொண்டு போகலாம். வேறு வசதிகள் இல்லாவிட்டால் கொண்டு போகலாம். ஆனால் இதிலே, தடையம் கண்டுபிடிக்க வசதியுள்ள கருவிகள், புகைப் படக் கருவிகள், நுண்ணோக்காடி கையக வண்ணப் பட்டை நிழற்பதிவுக் கருவி, ஊதா கதிரியல் ஒளி விளக்கு, நிழற்பட ஒளி பாய்ச்சும் விளக்கு, விரல் ரேகை பதிவு செய்யப்படும் கருவி, அதற்கான பதிவுத்தாள், அடிச்சுவடுகளை அச்செடுத்துக் கொள்வதற்கான சாதனங்கள், உருப்பெருக்கிக் கண்ணாடிகள், மற்றுமுள்ள உப கருவிகள், அளவிடும் கருவிகள், கண்ணாடிப் பொருட்களும் மற்றும் தேவைப்படுகிற இரசாயனப் பொருட்களும் கொண்டு செல்லப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் -விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) கவன ஈர்ப்பு.

(அ) கண் நோய் தொற்று நோயாக சென்னை மாநகரிலும் சில மாவட்டங்களிலும் பரவி வருவது குறித்து.

திரு. துரைமுருகன் : சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், சென்னை மாநகரிலும், சில மாவட்டங்களிலும் கண் நோய் தொற்று நோயாகப் பரவி வருவது குறித்தும், இதற்கு உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங் களிலும் பெருவாரியான மக்கள் 1971 மே திங்களில் தொற்றும் தன்மையுள்ள ஒரு வகைக் கண் நோயினால் (conjunctivitis) பாதிக்கப்பட்டனர்.

1971-மே மாதத் தொடக்கத்தில் இந்நோய் பரவுவதாக அறிவிக்கப்பட்டது. இது விரைவில் தொற்று நோயாகப் பரவத் தொடங்கி மே மாத மூன்றாம் வாரத்தில் உச்ச நிலையை அடைந்தது. அப்போது இந் நோயினால் பாதிக்கப்பட்ட 70 முதல் 80 சதவித நோயாளிகள் மருத்துவமனைகளில் வெளி நோயாளிகளாகச் சிகிச்சையளிக்கப்பட்டனர். இத் தொற்று நோய் முதற்கண் ஒரு கண்ணில் பற்றி விரைவாக மற்றொரு கண்ணுக்குப் பரவுகிறது. இதனால் இமைப் புருவங்கள் பெரிதும் வீங்கிக் கொண்டு, கண்ணிலே உறுத்தல் அதிகமாகிறது. பலருக்கு இமைகளில் ரத்தப்போக்கு காணப்படுவதுடன் இமையும் வீங்கி